### இணைந்து பணியாற்றி

# இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.12.2023 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் நா.எழிலன், இ.கருணாநிதி, இ.பரந்தாமன், எஸ்.அரவிந்த் ரமேஷ் மற்றும் திரு.வி.க.நகர் கண்காணிப்பு அலுவலர் கணேசன் ஆகியோரிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ‘மிக்ஜாம்’ புயலினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்தும் கேட்டறிந்ததோடு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடம் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

புதுடெல்லி, டிச. 7 -

இந்த இக்கட்டான காலகட்டத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றி இந்த இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளை சீர்செய்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அனைத்து இடங்களிலும் நீர் வடிந்து, இயல்பு நிலை திரும்ப மேலும் சில காலம் தேவைப்பட்டாலும், அதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வெளி மாவட்டங்களில் இருந்து வந்திருக்கும் பணியாளர்கள், அனைத்து அரசு உயர் அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் உத்தரவிட்டுள்ளேன்.**

**இந்தப் பணிகள் அனைத்தையும் நானே நேரடியாகக் கண்காணித்து வருகின்றேன்.**

**இந்த இக்கட்டான காலகட்டத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றி இந்த இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சூளை கண்ணப்பர் திடலில் உள்ள சமுதாய நலக் கூடத்திற்கு நேரில் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு, பாய், போர்வை ஆகியவற்றை வழங்கி, அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பொது வெளியில் கருத்துகளைச் சொல்லும்போது கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு தேவை!

# தனிப்பட்ட கருத்துகள் சொல்வதை தவிர்த்திடுக!

## கழக நிர்வாகிகளுக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வேண்டுகோள்!



சென்னை, டிச. 7-

கழக நிர்வாகிகளுக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில், பொது வெளியில் கருத்துகளைச் சொல்லும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டை முறையாகப் பின்பற்றி, நாகரிகத்தையும், பண்பாட்டையும் காத்திடும் வகையில் செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

“கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை” வருமாறு:-

நடந்து முடிந்த ஐந்து மாநிலச் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார், தவறான பொருள் கொள்ளத்தக்க சொல் ஒன்றைப் பயன்படுத்தி இருந்தார். இதனை அறிந்த கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், செந்தில்குமாரைக் கடுமையாகக் கண்டித்தார்கள்.

பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கும் அறிக்கை ஒன்றை செந்தில்குமார் வெளியிட்டு உள்ளார்.

செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கையில், “முடிந்த ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துக் கூறிய நான், தவறான பொருள் அளிக்கும் வகையில் ஒரு சொல்லைப் பயன்படுத்தி விட்டேன்.

எந்த உள்நோக்கத்துடனும் அந்த சொல்லை பயன்படுத்தவில்லை,

அது தவறான பொருள் தருவது என்பதால் வெளிப்படையாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.” என்று சொல்லி இருக்கிறார்.

பொதுவெளியில் கருத்துகளைச் சொல்லும்போது நாகரிகத்தையும் பண்பாட்டையும் காக்கும் வகையில் அனைவரும் நடந்து கொள்ள வேண்டும் என்று தலைமைக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய கடமை - கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் அனைவரும் முறையாகப் பின்பற்றியாக வேண்டும். மேலும், அகில இந்தியப் பிரச்சினைகள் பற்றிக் கருத்துச் சொல்லும் போது, தனிப்பட்ட முறையில் கருத்துகளைச் சொல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அண்ணல் அம்பேத்கர் நினைவு தினம்!

## சிலைக்கு அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் மரியாதை!

செஞ்சி, டிச. 7 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் டாக்டர் அம்பேத்கரின் 67 வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகரச் செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பொருளாளர்நெடுஞ்செழியன், மாவட்ட பிரதிநிதி ஜெ.எஸ். சர்தார், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொன்னம்பலம்,மசுமித்ரா சங்கர், சீனிவாசன், நூராஜகான் ஜாபர், சிவகுமார், ஆவின் இயக்குனர் ஆறுமுகம், மாவட்ட ஆதி திராவிடர் நல அணி துணை அமைப்பாளர் சேகர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பிரபு, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுதாகர், தொண்டரணி பாஷா,செஞ்சி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜம் போதி பழனி, துணை அமைப்பாளர் பழனி,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், வழக்கறிஞர்கள் பாபு, சந்திரன், நிர்வாகிகள் கறிவேப்பிலை ஏழுமலை, பஸ் ஸ்டாண்ட் செல்லன் , சம்பத், ராம்குமார், ரசூல், கோகுல், ஹாஜி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில்

# அனைவரும் கடுமையாக உழைத்து வெற்றி பெறுவோம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், டிச. 7 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற கழக வாக்கு சாவடி முகவர்கள் மற்றும் வாக்கு சாவடி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் தி.மு.க. மேற்கு மாவட்ட செயலாளரும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது.

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச் சாவடி உறுப்பினர்கள் கூட்டம் தனியார் மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணை செயலாளர் ராஜாமணி வரவேற்றார். மாநில தலைமைக்காக தேர்தல் பொறுப்பாளர் நாச்சி முத்து, மாணவரணி மாநிலத் துணைச் செயலாளர் பொன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை ஏற்று சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் உணவுத் துறை அமைச்சர் பேசியதாவது : -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்று கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறார். தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு தேர்தல் அறிக்கையினை மட்டுமல்லாமல், பல்வேறு சிறப்பு திட்டங்களையும் உருவாக்கி அதனை நிறைவேற்றியும் வருகிறார். தமிழக முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கடந்த 30 மாத ஆட்சியின் சீரிய மக்கள் நலத்திட்டங்களை குறிப்பாக மகளிர் உரிமைதொகை, பெண்கள் கட்டணமில்லா பேருந்து பயணம், பள்ளி காலை உணவு திட்டம் , 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் உள்பட எண்ணற்ற திட்டங்களை வீடு வீடாக கூறி வாக்கு சேகரிக்க வேண்டும் என்றும் நடைபெறும் வாக்குச் சாவடி முகவர்கள், உறுப்பினர்கள் கூட்டம் வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்கு மிக முக்கியமானது.

கடுமையாக உழைத்து வெற்றியை பெற்று தர வேண்டும் என்று உணவுத் துறை அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் கவிதா பார்த்திபன், வீராசாமி நாதன் சீனிவாசன், சுப்பையன் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் வாக்கு சாவடி குழு உறுப்பினர்கள் கட்சி நிர்வாகிகள் என 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஷெனாய் நகர் அம்மா அரங்கத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து சுகாதார வளாகத்தை மேம்படுத்த வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையின் மீது உடனே நடவடிக்கை எடுக்குமாறும், மருத்துவ பரிசோதனை முகாம் நடத்துமாறும் உயர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் அண்ணா நகர் சட்ட மன்ற உறுப்பினர் மோகன் மற்றும் பகுதி செயலாளர் பரமசிவம் கழக நிர்வாகிகள் உடனியிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மரக்காணம் வட்டம் அனுமந்தையில் தாழ்வான பகுதியில் குடியிருந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 53 நபர்களுக்கு உணவு,குடிநீர் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கேட்டறிந்து ஆறுதல் கூறினார். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், கோட்டக்குப்பம் நகர மன்றத் தலைவர் எஸ். எஸ். ஜெய மூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் உஷா. பி. கே. டி. முரளி, ஒன்றியச் செயலாளர்கள் பி. கே. டி. முரளி, கிளியனூர் இராஜி, மைதிலி இராஜேந்திரன், ஒன்றிய குழுத் தலைவர் தயாளன், நகர மன்றத் தலைவர் இரவிக்குமார், துணைத் தலைவர் முபாரக் , பழனி உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.